**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 37/மா/2023**

**நாள்: 01.03.2023**

திரு. R. மணிகண்டன்,
கரூர். – முறையீட்டுமனுதாரர்

ஆணையர், கரூர் மாநகராட்சி,
கரூர். – எதிர்மனுதாரர்

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவது தெரு, கதவு எண்.691/7E4 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மணிகண்டன் என்பவரின் 05.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.02.2023–ல் பெறப்பட்டு 37/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவதுதெரு, கதவு எண்.691/7E4 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மணிகண்டன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 05.02.2023 நாளிட்ட தனது மனுவில்:

"கரூர் மாநகராட்சியில் உள்ள 44வது வார்டில், பொன்நகர் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை, தமிழ்நாடு நகர உள்ளாட்சி சட்டத்தின்படி அகற்றக்கோரி, நானும் எனது தாயுமான R.ரெத்தினம் என்பவரும் பலமுறை புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கரூர் மாநகராட்சி 44வது வார்டில், பொன்நகர் பகுதியில், 40 அடி அகலமுள்ள கிழக்கு மற்றும் மேற்கு ரோட்டினை பல நபர்கள் சுமார் 10 அடி அகலமுள்ள மாநகராட்சி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளனர். இது சம்பந்தமாக பலமுறை புகார் அளித்தும், மாநகராட்சி ஆணையர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எடுத்துக்காட்டாக, கே.எம். வேலுச்சாமி என்ற நபர், மாநகராட்சி சாலையை ஆக்கிரமிப்பு செய்து, அதில் கழிவறை மற்றும் குளியலறை கட்டிடம் கட்டியதோடு மட்டுமல்லாமல், மேலும் மாநகராட்சி சாலையில் தனது பழைய இரும்பு கடைக்கு தேவையான அலுவலகம் மற்றும் தனது கார்களை

நிறுத்துவதற்கு ஆஸ்பெஸ்ட்டாஸ் கூடாரம் போன்றவற்றை அமைத்து 40 அடி அகல கிழக்கு மற்றும் மேற்கு பொன்நகரிலிருந்து தாந்தோன்றிமலை அரசு கலைக் கல்லூரி செல்லும் பிரதான சாலையில், சுமார் 9 அடி அளவுள்ள மாநகராட்சி சாலை நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுத்துகிறார். மேலும், மாநகராட்சி சாலையை ஆக்கிரமிப்பு செய்து, அதில் பழைய இரும்பு மற்றும் பிளாஸ்டிக் பொருட்களையும் போட்டு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துகிறார்.

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் தெருக்கள், பொது இடங்கள் போன்ற இடங்களில் செய்யப்படும் ஆக்கிரமிப்புகளை காலி செய்ய தமிழ்நாடு நகர உள்ளாட்சி சட்டத்தின்படி மாநகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுக்காத காரணத்தால், மாநகராட்சி ஆணையர் மீது Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules படி, ஒழுங்கு நடவடிக்கையும் மற்றும் இதர சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன். ஆக்கிரமிப்பு பற்றிய அனைத்து ஆதாரங்களும் என்னிடம் உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 17.02.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கரூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

3) கரூர் மாநகராட்சி ஆணையர் தனது 21.02.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள ஆட்சேபனைக்குரிய இடத்தில் திரு. கே.எம். வேலுச்சாமி வைத்திருந்த இரும்பு கம்பிகள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு மாநகராட்சி சாலையில் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன. அதில் இருந்த 15 வருட நிரந்தர கட்டிடத்தை நகரசார் ஆய்வர் மூலம் 25.01.2023 அன்று அளவீடு செய்யப்பட்டது. அன்னார் அறிக்கையில் மாநகராட்சி சாலையில் கழிப்பறை, குளியல் அறை மற்றும் ஆஸ்பெட்டாஸ் பந்தல் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஆக்கிரமிப்புதாரர் திரு.வேலுச்சாமி அவர்களிடம் குளியல் அறை, கழிவறை ஆகியவற்றை அகற்ற தெரிவித்ததற்கு தன்னுடைய கட்டிடத்தில் ஐந்து குடும்பங்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றும் ஐந்து குடும்பங்களும் மேற்படி குளியல் அறை மற்றும் கழிப்பறையினை பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் உடனடியாக மாற்று ஏற்பாடு செய்யவோ அனைத்து குடும்பங்களை வேறு இடத்திற்கு மாறி செல்வதற்கு தனக்கு 3 வாரகாலம் அவகாசம் வேண்டும் என கோரினார். தற்போது அவ்வீட்டின் முன்பகுதியில் இருந்த ஒரு நபர் குளியல் அறை மற்றும் கழிவறை அமைக்க ஏதுவாக குடும்பத்தை காலிசெய்துவிட்டார்.

எனவே அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்ற நிலையில் 21.02.2023 அன்று மாநகராட்சி பணியாளர்களை கொண்டு மாநகராட்சி சாலையில் இருந்த ஆட்சேபனைக்குரிய கழிவறை, குளியல் அறை மற்றும் ஆஸ்பெட்டாஸ் பந்தல் ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டது என்ற விளக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் இந்நிலையில் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று முறைமன்ற நடுவம் முறையீட்டு மனு எண்.37/மா/2023 மனுவில் உள்ள புகாரை தள்ளுபடி செய்து உரிய நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" எனவும் குறிப்பிட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது தொடர்பான புகைப்படங்களையும் கரூர் மாநகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 17.02.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் அனுப்பியுள்ள 27.02.2023 நாளிட்ட மின்னஞ்சலில் தனது தாத்தாவின் இறப்பு காரணமாக 27.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராக இயலவில்லை என தெரிவித்துள்ளார்.

6) கரூர் மாநகராட்சி முதுநிலை நகரமைப்பு அலுவலர் 27.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :

"கரூர் மாநகராட்சி வார்டு எண்.44 பொன்நகர் மாநகராட்சி சாலையில் இரும்புக்கடை நடத்தி வரும் திரு. கே. எம். வேலுச்சாமி என்பவர் சாலையிலேயே இரும்புக் கம்பிகள், பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியவற்றை கொட்டி வைத்தும், அச்சாலையிலேயே கழிவறையும், குளியல் அறையும் கட்டியுள்ளார் என்பது குறித்த புகார் மனு பெறப்பட்டதையொட்டி மேற்கண்ட இடத்தை ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப் பின்னர் அங்கு கொட்டப்பட்டிருந்த பழைய இரும்பு கம்பிகள் மற்றும் இதர பொருட்கள் அகற்றப்பட்டது. மேலும் அச்சாலையில் தனியரால் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த குளியலறை மற்றும் கழிப்பறை மற்றும் ஆஸ்பெட்டாஸ் பந்தல் ஆகியவை அகற்றப்பட்டு விட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்து, அதன் புகைப்பட நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் கரூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் கரூர் மாநகராட்சி முதுநிலை நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியமுடிகிறது.

மனுதாரர் கரூர் மாநகராட்சி 44வது வார்டில் பொன்நகர் பகுதியில் 40 அடி அகலமுள்ள கிழக்கு மற்றும் மேற்கு சாலையில் இரும்புக் கம்பிகள், பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியவற்றை கொட்டி வைத்தும், அச்சாலையிலேயே கழிவறையும், குளியல் அறையும் திரு.கே.எம். வேலுச்சாமி என்பவர் கட்டியுள்ளார் என்றும் அவ்வாறான ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் மேலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள சாலையில் திரு. கே.எம். வேலுச்சாமி அவர்களால் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த கட்டுமானங்கள் அகற்றப்பட்டுவிட்டது என கரூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் முதுநிலை நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து தெரியவருகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

<u>பிரிவு " 7 " The Ombudsman shall perform all or any of the following functions, namely –</u>

7 (c) <u>where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,</u>

இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:

மனுதாரர் திரு. ஆர். மணிகண்டன் சுட்டிகாட்டிய ஆக்கிரமிப்புக்கு காரணமாக இருக்கும் திரு. கே. எம். வேலுச்சாமி என்பவர் நிரந்தர கட்டடத்தை கட்டி 15 வருடமாக கரூர் மாநகராட்சிக்குட்பட்ட

வார்டு எண்.44, பொன்நகர் மாநகராட்சி சாலையில் பழைய இரும்பு கடைவைத்தும், பழைய பொருட்களை கொட்டிவைத்தும், கழிவறை, குளியல் அறை கட்டியும் உள்ளதை கரூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது. இந்நிகழ்வு கரூர் மாநகராட்சியில் பணிபுரியும் கள அலுவலர்களின் கடமை தவறிய செயலாகவே இம்முறைமன்றம் கருதுகிறது. கள அலுவலர்கள் தங்கள் பணியினை செவ்வனே செய்திருந்தால் இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை. மாநகராட்சி அலுவலர்கள் பொது மக்கள் மனு அளிக்கும்வரை காத்திருக்காமல் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. இனி இதுபோன்று நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்க அனைத்தும் மாநகராட்சிகளுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கிடவும், பல ஆண்டுகள் மாநகராட்சி சாலையில் இருந்த ஆக்கிரமிப்பினை அகற்ற எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ள சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 01 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.R.மணிகண்டன்,
த/பெ. K.ராமசாமி,
69 I /7E4, பாரதிதாசன் நகர்,
நான்காவதுதெரு, தாந்தோன்றிமலை (அஞ்சல்)
கரூர் – 639 005.

2)ஆணையர்,
கரூர் மாநகராட்சி, கரூர்.

3)நகராட்சிநிர்வாகஇயக்குநர்,
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா.அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

4)இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா.அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

நகல்.
மாண்புமிகுமுறைமன்றநடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக